# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.68/2024** **நாள் :30.09.2024**

## சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய 2024-25ம் இரண்டாம் அரையாண்டிற்கான குடிநீர் / கழிவுநீர் வரியினை 01.10.2024 முதல் 30.10.2024க்குள் முழுமையாக செலுத்துவோருக்கு முதன் முறையாக 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னை குடிநீர் வாரியத்திற்கு ஆண்டுதோறும் இருமுறை பொதுமக்கள் குடிநீர் / கழிவுநீர் வரியினை செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில் உரிய காலக்கட்டத்தில் வரியினை செலுத்துவோர்களை ஊக்குவிப்பதற்காக 01.10.2024 முதல் 30.10.2024க்குள் முழுமையாக செலுத்துவோருக்கு முதன் முறையாக 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது.

இந்த 5 சதவீதம் ஊக்கத் தொகையானது நடப்பு கேட்புத் தொகைக்கு மட்டுமே வழங்கப்படும். இம்முறையானது இரண்டாவது அரையாண்டு தொடங்கும் நாளான 01.10.2024 முதல் அமலுக்கு வரும்.

எனவே, பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்களது 2024-25 ஆம் இரண்டாம் அரையாண்டிற்கான குடிநீர் / கழிவுநீர் வரியினை 30.10.2024-க்குள் முழுமையாக வாரியத்திற்கு செலுத்தி 5 சதவீதம் ஊக்கத்தொகையாக (அதிகபட்சம் ரூ.1500/-) பெற்று பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in